II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**LAOP.No. 127 of 2004**

Deposition of witness for the Respondent /RW1
Respondent solemnly by C.Gopikrishnan, Examiner
in accordance with the provision of Act I for 1873 on 10.09.2024

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | R.Manikandan | Caste | : |
| Father's / Husband's Name | : | | Calling | : |
| Age | : | | Religion | : |
| Village | : | | Taluk | : |

முதல் விசாரணை—

நான் தற்பொழுது வெளிவட்டப்பாதை திட்டம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் தனிவட்டாச்சியராகப் பணிபுரிந்து வருகின்றேன்.நான் எனது நிருபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கின்றேன் அதனை என்னுடைய முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். எனது தரப்பு ஆவணங்களாக கீழே கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகின்றேன். 24.03.2004 தேதியிட்ட தனிவட்டாச்சியர் வெளிவட்டப்பாதை திட்டம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட கடித எண். Lr.Hc.142/02/A/Unit IV, dated 24/03/2004 கடிதத்தோடு சேர்த்து அனுப்பப்பட்ட Award.No.1/2002, Sl.No.49. dated.31.01.2002 தேதியிடப்பட்டது எ.ம.சா.ஆ.1. கையகப்படுத்தப்பட்ட இடத்தில் இருந்த கட்டிடத்தை திருவள்ளூர் மாவட்ட பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அவர்கள் கட்டிட மதிப்பை கணக்கீடு செய்து கொடுத்த கணக்கீட்டை உறுதி செய்து சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நில நிர்வாக ஆணையரின் அவர்களின் செயல்முறை ஆணை எ.ம.சா.ஆ.2. வரிசைகள் ( 4 தாள்கள்). கையகப்படுத்த கட்டிடங்களுக்கு இழப்பீடுத் தொகை சென்டுக்கு ரூ.670/—ம்,

பொதுப்பணித்துறையால் மேற்படி நிலத்தில் உள்ள கட்டிடங்களுக்கு நிர்னயம் செய்த தொகையும் நில ஆர்ஜித அலுவலரால் நில எடுப்பு சட்டத்திற்கு உட்டபட்டு நிர்னயம் செய்யப்பட்டுள்ளது. கோருனர்களின் கோரிக்கை மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

(அறிவார்ந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகின்றது)